Justiz- und Sicherheitsdepartement des Kantons Basel-Stadt

**Generalsekretariat**

▶ **Gewaltschutz und Opferhilfe**

# வன்முறை, அச்சுறுத்தல்கள் மற்றும் பின்தொடர்தல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க மின்னணு கண்காணிப்பு

ஒரு குறிப்பிட்ட ஆபத்தை விளைவிக்கும் நபரின் வன்முறை, அச்சுறுத்தல்கள் அல்லது பின்தொடர்தல் ஆகியவற்றிலிருந்து சிறப்பாகப் பாதுகாக்கப்படுவதற்கு, நீங்கள் ZGB ஆர்டிகிள் 28b இன் படி உரிமையியல் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்கு அவர் உங்களை அணுகுவது மற்றும்/அல்லது உங்களைத் தொடர்புகொள்வது தடைசெய்யப்படும். ZGB ஆர்டிகிள் 28c இன் படி இந்தத் தடையைக் கண்காணிக்க ஆபத்தை விளைவிக்கும் நபர் மின்னணு டிரன்ஸ்மிட்டரை அணிவதற்காக உரிமையியல் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். கண்காணிக்கப்பட்ட நபர் இந்த கண்காணிப்பின் செலவுகளுக்கு பங்களிக்க கடமைப்பட்டவர் ஆவார்.[1]

## மின்னணு கண்காணிப்பு எவ்வாறு செயல்படுகிறது?

கண்காணிக்கப்பட்டு வரும் நபரின் கணுக்காலில் ஒரு டிரான்ஸ்மிட்டர் வைக்கப்படும். இந்த டிரான்ஸ்மிட்டர் அந்த நபர் எந்த நேரத்தில் எங்கு இருக்கிறார் என்பதை இடங்காணல் கருவி (GPS) மூலம் தெரிவிக்கிறது. இந்த ட்ரான்ஸ்மிட்டர் கீழே போடப்பட்டாலோ அல்லது கையாளப்பட்டாலோ அதையும் தெரிவிக்கிறது. அந்த நபர் தடையை மீறியுள்ளாரா (இது «மறைமுகக் கண்காணிப்பு» என அழைக்கப்படும்) என சீரான இடைவெளியில் (நிகழ்நேரத்தில் உடனடியாக அல்ல) சரிபார்க்கப்படுகிறது. விதிமீறல்கள் நடந்ததற்கு பிறகு தான் பார்க்கப்படுகின்றன. உடல் ரீதியாக அல்லாத வழிகளில் (கைபேசி, வாட்ஸ்அப், தொலைபேசி, மின்னஞ்சல், கடிதம் வழியாக) தடைசெய்யப்பட்ட தொடர்பைக் கண்டறிய முடியாது.

## மின்னணு கண்காணிப்பு என்னை எவ்வாறு பாதுகாக்கிறது?

கண்காணிக்கப்பட்ட நபர் தொடர்புகொள்ள மற்றும் அருகாமையில் வருவதற்கு உள்ள தடையைக் கடைபிடிப்பார் என்பதற்கு மின்னணு கண்காணிப்பு உத்தரவாதம் அளிக்காது. ஆனால் அந்த நபர் தடையைக் கடைபிடிக்கவில்லை என்றால், அதிகாரிகள் அதைப் பார்ப்பார்கள் (நடந்ததற்கு பிறகு). இதன்மூலம் எந்த இடத்தில் தடைமீறல் நடந்தது என்பதை நிரூபிக்க முடியும். இது ஆபத்தை விளைவிக்கும் நபர், தொடர்பு மற்றும் அருகாமையில் வருவதற்கு உள்ள தடையைக் கடைப்பிடிக்க உதவும்.

## தடை மீறல் இருந்தால் என்ன நடக்கும்?

ஒரு தடை மீறல் நடந்ததற்கு பிறகு மட்டுமே பார்க்கப்படுகிறது (இது «மறைமுகக் கண்காணிப்பு» என்று அழைக்கப்படுகிறது). அதிகாரிகள் தடை மீறலைக் காணும் நேரத்தில், ஆபத்தை விளைவிக்கும் நபர் பொதுவாக தடைசெய்யப்பட்ட இடத்தை விட்டு வெளியேறிவிடுகிறார். தடை மீறல் ஏற்கனவே நடந்துவிட்டது என்பதால்

[1] சட்ட அடிப்படை: கூட்டாட்சி நிலை: ZGB ஆர்டிகிள் 28b மற்றும் 28c: https://www.fedlex.admin.ch/eli/cc/24/233_245_233/de (ஜனவரி 2022 நிலவரப்படி)
மண்டல நிலை: வன்முறையால் பாதிக்கப்பட்ட நபர்களை பாதுகாப்பதற்கான மின்னணு கண்காணிப்பு தொடர்பான விதிமுறை (SG 212.191): https://www.gesetzessammlung.bs.ch/app/de/texts_of_law/212.191 (ஜனவரி 2022 நிலவரப்படி).

காவல்துறையினரால் இனி அதை தடுக்க முடியாது, எனவே காவல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்படுவதில்லை. அதிகாரிகள் கண்காணிப்பு அமைப்பின் மூலம் தடைமீறலைக் கண்டறிந்தால், அவர்கள் ஒருசில நாட்களில் அரசு வழக்கறிஞர் அலுவலகம் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தடைமீறலைப் பற்றி புகார் அளிக்கின்றனர். அரசு வழக்கறிஞர் கண்காணிக்கப்பட்ட நபருக்கு அபராதம் விதிக்கிறார். இதற்குரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், உரிமையியல் நீதிமன்றம் உங்கள் கோரிக்கையின் பேரில் மின்னணு கண்காணிப்பை நீட்டிக்க முடியும்.

## தடை மீறலை நான் கண்டறிய முடியுமா?

சில வேலை நாட்களுக்குள் மீறல்கள் குறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்படும் (அறிக்கையின் நகல் அரசு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு). மீறல்களைப் பற்றி நீங்கள் அறிய விரும்பவில்லை என்றால், நீங்கள் உரிமையியல் நீதிமன்றத்தில் இதைப் பற்றித் தெரிவிக்கலாம்.

## நான் பாதுகாப்பாக உணரவில்லை என்றால், நான் என்ன செய்ய முடியும்?

நீங்கள் அவசரநிலையில் இருந்தால், 117 என்ற அவசர எண்ணில் எந்த நேரத்திலும் காவல்துறையை அழைக்கவும்.

## நான் பாதுகாப்பைத் தேடினால் யாரைத் தொடர்பு கொள்வது?

பாசில் மண்டலத்தில் உங்களுக்குப் பல்வேறு பாதுகாப்புச் சலுகைகள் தயாராக உள்ளன. அவசரகால அட்டையில் நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய அனைத்துத் துறைகளையும் காணலாம்.

- அவசரகால அட்டை மேலும் இங்கே:
  https://www.bs.ch/themen/sicherheit-und-demokratie/gewalt/haeusliche-gewalt/infomaterial-deutsch-und-fremdsprachen

- பாசிலின் பாதிக்கப்பட்டவர் உதவி சமூக, சட்ட, உளவியல், மருத்துவம், காப்பீடு மற்றும் நிதி சிக்கல்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்குகிறது: தொலைபேசி. 061 205 09 10, www.opferhilfe-beiderbasel.ch